FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March- 2018

| தரம் :- 13 (2018) | கிறிஸ்தவம் I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி I**

❖ **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. திருவிவிலியம் ஏனைய நூல்களிலிருந்து வேறுபட்டிருப்பதற்கான காரணம் காட்டும் போது அதை ஓர் இலக்கிய நூல் எனவும் கூற முடிவது அதில்.
    1) காட்சிகள் உள்ளடங்கியிருப்பது
    2) மொழிநடை இலகுவானது
    3) பழமொழிகள் உள்ளடங்கியிருப்பது
    4) புரதான சிந்தனைகள் உள்ளடங்கியிருப்பது
    5) புரதான கருத்துக்கள் உள்ளடங்கியிருப்பது

02. இணைத்திரு முறை நூலின் பெயர்ப்பட்டியலை சேர்ந்தது
    1) எஸ்தர் 2) மீக்கா 3) செகரியா 4) மலாக்கி 5) தோபித்து

03. திருவிவிலியத்தில் குறிப்பிட்டுள்ள படி கி.மு 1200 – கி.மு 1020 இற்கு இடைப்பட்ட அரசர்களின் காலத்தில் இடம் பெற்ற பிரதான நிகழ்வு
    1) இஸ்ராயேல் அரச பரம்பரை ஆரம்பிக்கப்பட்டமை.
    2) சாலமோன் மன்னன் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்தியமை.
    3) ரெகபோவாம் அரசனாக நியமிக்கப்பட்டமை
    4) ஜெரோபோவாம் அரசன் புரதான வழிபாட்டுத் தலத்தைப் புனரமைப்பு செய்தமை.
    5) வட, தென் அரசுகள் உருவாகியமை.

agaram.lk

04. நாடு திரும்பிய பின் எருசலேம் மதிலைக் கட்டியெழுப்புவதில் தலைமை தாங்கியவர்
    1) செருபாபேல் 2) நெகேமியா 3) எஸ்ரா 4) தாரியுஸ் 5) சீசர்

05. கற்றோரின் மொழி என அழைக்கப்படுவது
    1) இலத்தீன் 2) எபிரேயம் 3) அரபு 4) கிரேக்கம் 5) ஆங்கிலம்

06. உடன்படிக்கையோடு இணைக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும், உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாக இருக்க வேண்டும் என்பதை உபகருப்பொருளாகக் கொண்ட மரபு
    1) J மரபு 2) E மரபு 3) D மரபு 4) P மரபு 5) J, P மரபு

07. இறைவன் ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குறுதியாகிய வாக்களிக்கப்பட்ட நாட்டை உரிமையாக்கிக் கொடுப்பதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுவது
    1) ஈசாக்கின் அழைப்பு
    2) மோசேயை அழைத்தல்
    3) யாக்கோபுவை அழைத்தல்
    4) வெள்ளப்பெருக்கு
    5) யோசுவாவை அழைத்தல்

08. மோசே தமது தொழிலாகத் தேர்ந்து கொண்டது

1) விவசாயம் 2) வில்வித்தை 3) மீன்பிடி 4) மந்தை மேய்த்தல் 5) நிர்வாகம்

09. பத்துப் பெருந்துன்பங்களும் எந்த மரபுகளின் அடிப்படை எண்ணக்கருவாகும்

1) குரு, யாவே, இணைச்சட்டம் 2) குரு, ஏலோகிம், இணைச்சட்டம்

3) யாவே, ஏலாகிம், இணைச்சட்டம் 4) குரு, யாவே, ஏலோகிம், இணைச்சட்டம்

5) குரு, யாவே, ஏலோகிம்

10. மேய்ப்பர்களின் விழாவான இஸ்ராயேல் பாஸ்காவின் முக்கிய அம்சம்

1) இரத்தம் 2) புளியாத அப்பம் 3) புதிய அறுவடை

4) திராட்சை இரசம் 5) தலைப்பேறு பலியிடல்

11. தமது அழைப்பினைப் பொது வழிபாட்டு வடிவம் கொண்டதாக அன்றி இறைவனோடு ஏற்பட்ட உரையாடலின் விளைவாக அனுபவித்த இறைவாக்கினர்

1) ஏசாயா 2) எரேமியா 3) மீக்கா 4) எசேக்கியேல் 5) செக்கரியா

12. ஏசாயா 1 – 39 வரையான முதலாம் ஏசாயா நூல் எழுதப்பட்டது.

1) யூதா அரசுக்கு அசீரியாவினால் எச்சரிக்கை விடுவிக்கப்பட்ட காலத்தில் எசாயாவினால் எழுதப்பட்டது.

2) பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட காலத்தில் எசாயாவினால் எழுதப்பட்டது.

3) பபிலோனியாவிற்கு நாடு கடத்தப்படுவதற்குமுன் எசாயாவினால் எழுதப்பட்டது.

4) யூத மக்கள் அசீரியாவிற்கு நாடு கடத்தப்பட்ட போது எசாயாவினால் எழுதப்பட்டது.

5) யூத அரசுக்கு அசீரியாவினால் எச்சரிக்கை விடப்படுவதற்கு முன் எசாயாவினால் எழுதப்பட்டது.

13. தூய மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இறையாட்சி பற்றிய முக்கிய மறை உண்மைகள்.

1) இரண்டு 2) மூன்று 3) நான்கு 4) பத்து 5) ஐந்து

14. இறையாட்சி எனும் வாழ்க்கை முறை சமூக மட்டத்திலிருந்து நோக்கும் போது மிகக்கடினமானதும் மனதைக் கவரக்கூடியதாக இல்லாத போதும் நிலை வாழ்வின் மகிழ்ச்சியை உருவாக்கித் தருவது என எடுத்துக்காட்டப்படுவது

1) திருமண விருந்து உவமை 2) புதையல் பற்றிய உவமை 3) முத்து பற்றிய உவமை

4) புளிப்பு மா பற்றிய உவமை 5) வலை பற்றிய உவமை

15. இயேசு மக்களோடு இணைந்துள்ள நிலையை வெளிப்படுத்தும் பெயர்

1) மானிட மகன் 2) இறை மகன் 3) கலிலேயா மகன்

4) பயணம் செய்யும் மனிதன் 5) எருசலேமின் மானிட மகன்

16. மக்களிடம் மறைவாக இருந்த இறை உறவு கிறிஸ்துவின் வாழ்க்கைப் பலியின் வழியாக வெளிப்படுத்தப்பட்ட சம்பவம்

1) புளித்த காடியைக் குடித்தல்

2) தமது உயிரைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தல்

3) முள் முடி சூட்டப்படுதல்

4) திருக்கோயிலின் திரை இரண்டாகக் கிழிதல்.

5) செந்நிற ஆடை அணிவித்தல்

17. தூய மாற்கு நற்செய்தியின் படி சிலுவையில் அறையப்பட்டிருந்த இயேசுவைப் பார்த்து "சிலுவையிலிருந்து இறங்கி உன்னையே விடுவித்துக் கொள்" என்று பழித்துரைத்தவர்கள்
   1) உரோமைப் படை வீரர்கள்  2) சிலுவையில் அறையப்பட்ட கள்வர்கள்
   3) அவ்வழியே சென்றவர்கள்  4) மறை நூல் அறிஞர்கள்  5) தலைமைக் குருக்கள்

18. உயிர்த்த கிறிஸ்துவை நம்புவதற்கு அவரைத் தொட்டுப் பார்ப்பது அவசியமில்லை என இயேசு யாருக்குக் கூறினார்
   1) பேதுரு  2) யோவான்  3) நிக்கதேமு  4) சமாரியப் பெண்  5) மகதலா மரியா

19. "நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள்" அந்த வாக்குறுதியானது
   1) கிறிஸ்து நாதர்  2) தூய ஆவியானவர்  3) திவ்விய நற்கருணை
   4) திருப்பலி  5) திருமுழுக்கு

20. இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் தூயபவுல் அக்கில்லாவையும், பிறிஸ்சில்லாவையும் சந்தித்தது
   1) பிலிப்பி  2) துரோவா  3) ஏதென்ஸ்  4) கொரிந்து  5) தெசலோனிக்கா

21. ஆரிய பேதகத்திற்கு எதிராகப் போராடிய முன்னோடி
   1) அலெக்சாந்திரியாவின் தூய சிறில்  2) கொன்ஸ்தாந்து நோபின் தூய பிளேவியன்
   3) அக்விலியாவின் தூய ஜெரோம்  4) அலெக்சாந்திரியாவின் தூய அத்தனாசியார்
   5) தகாஸ்தேயின் தூய அகஸ்டின்

22. உலகம் தொடங்கியது முதல் மீட்பு கிடைப்போர் அல்லது கிடைக்காமலிருப்போர் எவரென்பதை இறைவன் தீர்மானித்துள்ளார் என்பதைப் பிரதான போதனையாகக் கொண்டவர்.
   1) மாட்டின் லூதர்  2) சுவிங்லி  3) ஜோன்பிசர்  4) சேர் தோஸ்மூர்  5) ஜோன் கல்வின்

agaram.lk

23. கி.பி 1626ல் பிரான்ஸ் நாட்டின் மறைவாட்டக் குருக்களின் புனிதத் தன்மையை வளர்ப்பதற்கென துறவற சபையை ஆரம்பித்தவர்.
   1) லொயோலா இஞ்ஞாசியார்  2) பீற்றர் கனிசியஸ்  3) வின்சென்ட் டிபோல்
   4) றொபட் பெலார்மின்  5) பெட்ரிக் ஓசானம்

24. போர்த்துக்கேயர் காலத்தில் மறைத்தூதுப் பணியில் ஈடுபடுவோரைப் பாதுகாத்தல், அவர்களின் நலன் பேணுதல் ஆகிய பொறுப்புக்களை ஏற்று செயற்பட்ட பாதுகாப்புத்திட்டத்தினைக் குறிக்கும் பெயர்
   1) மக்னா கார்ட்டா சட்டம்  2) பத்றோ ஆடோ ஒப்பந்தம்
   3) எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு  4) கிழக்குப் பேரரசுக்கு கையளித்தல்
   5) மேற்குப் பேரரசுக்கு கையளித்தல்

25. "மேன்மை மிக்க தந்தையே உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய நற்செய்தியொன்றினை அறியத் தருகின்றோம். புதிய இனத்திற்கு இறைவனின் நற்செய்தியைக் கொண்டு செல்லும் நல்ல செய்தியை உங்களுக்கு மிக்க மகிழ்க்கியோடு அறிவிக்கின்றோம்" என்ற பகுதியுடன் தொடர்புடைய நிகழ்வு
   1) போத்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த செய்தியை அறிவித்தல்.
   2) தூய பவுல் புற இனத்தாருக்கு நற்செய்தியைக் கொண்டு செல்லல்.
   3) பெந்தக் கோஸ்தே நிகழ்வு.
   4) ஒல்லாந்தர் இலங்கைக்கு வருகை தந்த செய்தியை அறிவித்தல்.
   5) ஆங்கிலேயர் இலங்கை வருகை தந்த செய்தியை அறிவித்தல்.

26. ஒல்லாந்தர் காலத்தில் தலைமை ஆசிரியரின் மதிப்பும் மரியாதையும் சமூகத்திலே உயர்ந்து விளங்கக் காரணமாயிருந்தது

1) நாட் குறிப்பு பார்வையிடப்பட்டமை
2) தோம்பு பொறுப்பை நடாத்தியமை
3) ஒழுக்கம் பேணப்பட்டமை
4) நேரசூசி தயாரிக்கப்பட்டமை
5) வகுப்பு மேற்பார்வை செய்யப்பட்டமை

27. பாலை நிலப்பயணத்தில் இறைவன் இஸ்ராயேல் மக்களுக்குக் கொடுத்த சட்ட திட்டங்களினதும் படிப்பினைகளினதும் கருத்தாயமைவது

1) பத்துக் கட்டளையைப் பெற்றுக் கொடுப்பதற்கும்
2) சகோதர அன்பில் ஒருவருக்கொருவர் நியாயத்தையும் நீதியையும் நிறைவேற்றுவதாகும்.
3) இறைவன் வாக்குப் பண்ணிய நாட்டை நோக்கி அழைத்துச் செல்வதாகும்.
4) செங்கடலை இரண்டாகப் பிரிப்பதாகும்.
5) பாஸ்கா கொண்டாடுதல்.

28. இயேசு தமது சீடர்களுக்குக் கொடுத்த புதிய கட்டளை யாது?

1) இவ்வாறு தந்தையிடம் செபியுங்கள்
2) தாம் கொடுப்பதை மற்றவர்களுக்குத் தெரியாமல் கொடுங்கள்
3) தந்தையிடம் எப்போதும் செபியுங்கள்
4) ஒருவர் மற்றவர்களுடைய கால்களைக் கழுவுங்கள்
5) நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் மற்றவர்களிடம் அன்பு செலுத்துங்கள்.

29. "ஆவியைக்" குறிக்க பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல்

1) ரூஆக்  2) காரிஸ்மா  3) நெயுமா  4) மன்னீஸ்  5) ஹொரசே

agaram.lk

30. இறைவனின் சாயலாகவும் உருவமாகவும் படைக்கப்பட்ட மனிதனுக்கு சூழல் தொடர்பாக உள்ள பொறுப்பு யாது?

1) பொறுப்பாளியும் தலைவனும்
2) திட்டமிடுபவரும் உரிமையாளனும்
3) படைப்பவனும் மீட்பவனும்
4) தலைவனும் உரிமையாளனும்
5) உரிமையாளனும் மீட்பவனும்

31. தாவீதைத் திருப்பொழிவு செய்தவர்

1) யெஸ்சே  2) சாமுவேல்  3) சவுல்  4) ஏலி  5) மெல்கிசேதேக்

32. பின்வருவனவற்றில் விடுதலைப்பயணம் பற்றிய தவறான கூற்று

1) இஸ்ரயேலர் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தனர்.
2) விடுதலைப் போராட்டத்திற்கு மோசே தலைமை தாங்கினார்.
3) இஸ்ரயேலர் கலிலேயாக் கடலைக் கடந்து பாலை வனத்தை அடைந்தனர்.
4) பாஸ்கா உணவை உண்டபின் எகிப்திலிருந்து புறப்பட்டனர்.
5) விடுதலைப் பயணக்காலத்தில் பார்லோன் யோசேப்புப் பற்றி எதுவும் அறியாதிருந்தான்.

33. இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் உயர் வகுப்பை சார்ந்தவர்கள் யார்?

1) பரிசேயர், சதுசேயர்
2) சதுசேயர், தீவிரவாதிகள்
3) எசேனியா, தீவிரவாதிகள்
4) எசேனியர், தீவிரவாதிகள்
5) எசேனியர், பரிசேயர்

34. “விளங்கிக் கொள்ளுங்கள் எந்த ஒருவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்டது எதையும் அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது” என மரண நேரத்தில் இறுதி அறுவுரை கூறியவர்.

1) யாக்கோமே கொன்சால்வேஸ் 2) பிலிப்புஸ் பல்தேவுஸ் 3) சில்வெஸ்டர் பெனடிக்ற்
4) கிறிஸ்டோபர் பொன்ஜீன் 5) யோசப்வாஸ் அடிகளார்

35. திருவிவிலியம் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டதற்கான காரணம்

1) இலத்தீன் நிர்வாக மொழியாக விளங்கியமை.
2) இலத்தீன் வழிபாட்டு மொழியாக காணப்பட்டமை.
3) ஏனைய ஐரோப்பிய மொழிகளுக்கு தாய்மொழியாக விளங்கியமை.
4) உரோமைப் பேரரசில் இலத்தீன் மொழியின் செல்வாக்கு உயர்நிலையில் காணப்பட்டமை.
5) திருச்சபை சட்டங்கள் இலத்தீன் மொழியில் ஆக்கப்பட்டமை.

36. பபிலோனிய அடிமை வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட இறைவாக்கினர் இருவர்.

1) எரேமியா, எசேக்கியேல் 2) எரேமியா, செக்கரியா 3) ஏசாயா எரேமியா
4) ஏசாயா, எசேக்கியேல் 5) ஏசாயா, தானியேல்

37. கெரிசீம் மலையில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது

1) ஏதோம் மக்களால் 2) சமாரியர்களால் 3) கிரேக்கர்களால்
4) பெரிய ஏரோது மன்னன் 5) பெஞ்சமீன் குலத்தவர்

38. செனத்திரன் எனப்படுவது

1) யூத திருமணச் சடங்கு 2) யூதத் திருவிழா 3) யூதத் தோராவின் மறுபெயர்
4) யூதர்களின் பொதுச்சங்கம் 5) யூதப் பலி

agaram.lk

39. திருச்சபையின் பிறப்பு விழா என அழைக்கப்படுவது

1) உயிர்ப்பு விழா 2) கூடாரப்பண்டிகை 3) புளியாத அப்பப்பண்டிகை
4) கிறிஸ்மஸ் விழா 5) பெந்தக் கோஸ்தே விழா

40. சிலுவைப் போர்கள் உண்டாவதற்கான பிரதான காரணம்

1) ஸ்பெயின் நாட்டை இஸ்லாமியரிடமிருந்து மீட்க.
2) இஸ்லாமியப் படையெடுப்பிலிருந்து ஐரோப்பாவைப் பாதுகாக்க.
3) புனித பூமியை இஸ்லாமியரிடமிருந்து மீட்டுக் கொள்ள.
4) இஸ்லாமிய சக்தியினைத் தோற்கடிக்க.
5) துருக்கி, பிரான்ஸ் இற்கும் இடையிலான கருத்து வேறுபாடு காரணமாக.

41. ஒனேசிம் என்கின்ற அடிமையை கிறிஸ்துவில் தனது சொந்த சகோதரனாக ஏற்றுக் கொள்ளுமாறு திருத்தூதர் பவுல் யாருக்கு எழுதினார்?

1) பிலமோன் 2) பர்னபா 3) லூக்கா 4) யோன்மாற்கு 5) தீமோத்தேயு

42. நிறை வாழ்வின் வழி, உள்ளக மாளிகை எனும் ஆன்மீக நூல்களை எழுதியவர்

1) புனித சிலுவை அருளப்பர் 2) புனித அவிலா தெரேசாள் 3) புனித வின்சன்ட்டி போல்
4) புனித பிரான்சிஸ் 5) மத்தேயு டீ பஸ்ஸி

43. ஐரோப்பாவின் வரலாற்றில் மத்திய காலத்தில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியின் பேறாக மருத்துவ இயலுக்கு முதலிடம் அளித்த பல்கலைக்கழகம்

1) பொலொஞ்ஞா 2) பரிஸ் 3) கேம்பிரிஜ் 4) சலேர்னோ 5) சலமன்கா

44. மீட்பு இறையருளால் அல்ல மனிதனின் முயற்சியால் மட்டுமே பெற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று எனக் கூறும் பேதகம் எது?

1) பெலாஜிய பேதகம் 2) ஆரிய பேதகம் 3) மனிக்கேய பேதகம்
4) நெஸ்தோரிய பேதகம் 5) இயுத்திக்கேய பேதகம்

45. "பிள்ளைகளே பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள், பெற்றோரே உங்கள் பிள்ளைகளை ஆண்டவருக்கு ஏற்ற முறையில் கண்டித்து............" எனப் பவுல் குடும்ப வாழ்வு பற்றிக் குறிப்பிடும் திருமடல்

1) கொரிந்தியர் 2) கலாத்தியர் 3) எபேசியர்
4) தெசலோனிக் கேயர் 5) உரோமையர்

46. இறுதிச் சாசன நடையில் காணப்படும் பவுலின் பிரியாவிடை உரை நடை பெற்ற இடம்

1) கொரிந்து 2) துரோவா 3) எபேசு 4) பிலிப்பி 5) மிலேத்து

47. திருச்சபையின் முதல் பொதுச்சங்கம் என அழைக்கப்படுவது

1) நிசேயா பொதுச்சங்கம் 2) எபேசு பொதுச்சங்கம் 3) கல்சிடோன் பொதுச்சங்கம்
4) எருசலேம் பொதுச்சங்கம் 5) இரண்டாம் வத்திக்கான் சங்கம்

48. "ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" என்று தம்மைக் கொலை செய்தவர்களுக்காக மன்றாடியவர்

1) பேதுரு 2) ஸ்தேவான் 3) யாக்கோபு 4) பவுல் 5) யோவான்

49. இயேசுவின் மரண தண்டனைக்கான விசாரணையின் போது "அவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை" எனக் கூறியவர்

1) ஏரோது 2) அன்னா 3) பிலாத்து 4) காய்பா 5) நிக்கதேமு

50. இயேசுக் கிறிஸ்துவை புதிய மோசேயாகவும் புதிய மலையில் ஒரு புதிய சட்டத்தை புதிய இஸ்ராயேல் மக்களுக்கு அளிப்பவராக உருவாக்கிய நற்செய்தியாளர்

1) லூக்கா 2) மாற்கு 3) யோவான் 4) பவுல் 5) மத்தேயு

(50X1=50 புள்ளிகள்)

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March- 2018

| தரம் :- 13 (2018) | கிறிஸ்தவம் II | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

❖ **பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி I

01. 1) திருத்தூதர் பவுலிடம் காணப்பட்ட சிறந்த ஆளுமைப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக?
 2) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி புனித பவுல் தெசலோனிக்கேய சபையினருக்கு கூறிய படிப்பினைகள் நான்கினைக் குறிப்பிடுக.
 3) 70 ஆண்டுகளாக நாடு கடத்தப்பட்டவர்களாகத் துன்பத்துடன் வாழ்ந்த மக்களிடம் இறைவன் இறைவாக்கினர்களை அனுப்பியமைக்கான காரணங்கள் நான்கு தருக?
 4) எசேக்கியேல் இறைவாக்கினர் எடுத்துக்காட்டுவதின்படி மறுவாழ்வைக் காரணமாகக் கொண்டு மக்களிடத்தில் புதிய வாழ்வொன்று பற்றிய எதிர் நோக்குகளை ஏற்படுத்தும் நான்கு துறைகள் தருக?
 5) இணைத் திருமுறை நூல்களை அனுமதிக்காத திருச்சபையின் தந்தையர்கள் நால்வரைப் பெயரிடுக?

(4X5=20 புள்ளிகள்)

agaram.lk

02. 1) 13ம் நூற்றாண்டில் பரிஸ் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்ட புதிய கல்விப் பீடங்கள் எவை?
 2) நவீன உலகில் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திக்காக பங்களிப்பு செய்த கிறிஸ்தவ விஞ்ஞானிகள் நால்வரின் பெயர்களைத் தருக?
 3) கிறிஸ்தவ சித்திரக் கலையில் சுரங்க கல்லறை சித்திரங்களில் காணப்பட்ட திருவிவிலிய கதைகள் எவை?
 4) அயிகோன் ஓவியக் கலையின் பண்புகள் நான்கு தருக?
 5) மத்திய காலத்தில் சித்திரக் கலையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த சித்திரக் கலைஞர்கள் நால்வரின் பெயர்களைத் தருக?

(4X5=20 புள்ளிகள்)

03. 1) இயேசு சபை பற்றிய பிரதான விடயங்கள் நான்கு தருக?
 2) நிலவி வந்த தேவாலய அமைப்பு முறைகளை மாற்றி மறு மலர்ச்சியாளரான ஜோன் கல்வின் அவர்களால் கட்டியெழுப்பப்பட்ட ஆலயங்களில் காணப்படாத விடயங்கள் நான்கினைத் தருக?
 3) 16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட சமய மறு மலர்ச்சிக்கும் புதிய சமய இயக்கங்கள் (புரட்டஸ்தாந்து மற்றும் சீர் திருத்த சபை) தோன்றுவதற்கும் ஏதுவான காரணிகள் நான்கினை எழுதுக?

4) தூய யோவான் நற்செய்தியின் படி பிலாத்து முன்னிலையில் நிகழ்த்தப்பட்ட விசாரணையின் படி முறைகள் நான்கினைத் தருக?

5) யூத சமுதாயத்தில் பெண்கள் சிறுவர்கள், அடிமைகள் ஆகியோரின் சமூக நிலைப்பாடு பற்றி நான்கு விடயங்கள் தருக?

(4X5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. 1) பவுலின் மூன்றாம் மறைத்தூதுப் பயணத்தின் போது எபேசில் கலகம் ஏற்பட்டதற்கான காரணத்தையும் அமைதிப்படுத்திய முறையையும் விளக்குக?

(10 புள்ளிகள்)

2) தூய யோசவாஸ் அடிகளார் இலங்கையில் ஆற்றிய மறைத்தூதுப் பணி பற்றி விளக்குக?

(10 புள்ளிகள்)

05. 1) போர்த்துக்கேயரின் வருகைக்குமு முன் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பதற்கான சான்றுகள் 5 தந்து விளக்குக?

(10 புள்ளிகள்)

2) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக் கல்வித்துறையின் வளர்ச்சிக்கான திருச்சபையின் பங்களிப்பை ஐந்து காரணிகள் தந்து விளக்குக?

(10 புள்ளிகள்)

06. 1) ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் இலங்கையின் முன்னேற்றத்திற்குப் பெரும் பங்களிப்பினை செய்துள்ளது என்பதற்கான ஆதாரங்கள் 5 தந்து விளக்குக?

agaram.lk

2) ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் பணியாற்றிய மறைபரப்புச் (மிசனறி) சபைகளையும் அவற்றின் பணிகளையும் விளக்குக?

(10 புள்ளிகள்)

07. 1) இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் நீதித் தலைவர்களின் உருவாக்கமும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கியமான பணிகளையும் பற்றி விளக்குக?

(10 புள்ளிகள்)

2) தாவீது அரசனின் ஆட்சிக் காலத்தில் இஸ்ரயோல் தேசத்தில் இடம் பெற்ற சமூக அபிவிருத்திகள் பற்றி விளக்குக?

(10 புள்ளிகள்)

08. 1) பழைய ஏற்பாட்டின் தொடக்கநூலில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பெண்களையும் புதிய ஏற்பாட்டின் மீட்பின் செயலில் பங்கேற்ற இரண்டு பெண்களையும் பற்றி விளக்குக?

(10 புள்ளிகள்)

2) சமுதாயத்தில் பொது நன்மைகளைப் பூர்த்தி செய்ய கிறிஸ்தவனாகிய உமது செயற்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் திருவிவிலிய நோக்கில் ஐந்து விடயங்கள் ஊடாக விளக்குக?

(10 புள்ளிகள்)